

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், கோயம்புத்தூர் மாவட்டத்தில் சர்வதேச தரத்திலான கிரிக்கெட் மைதானம் அமைக்கும் பணி குறித்த ஆலோசனைக் கூட்டம் 4.12.2024 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகள்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது ஒரு மாத ஊதியத்தினை வழங்கினார்!

சென்னை, டிச. 7 -

ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தனது ஒரு மாத ஊதியத்திற்கான காசோலையை முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கினார்.

வங்கக் கடலில் உருவான “ஃபெஞ்சல் புயல்” காரணமாக பெய்த கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் சீரமைப்பு மற்றும் நிவாரண பணிகளை மேற்கொண்டு வருகிறது.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு உணவு, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் நிவாரண உதவிகள் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகின்றன. மழைக் காலங்களில் ஏற்படும் தொற்று நோய்களிலிருந்து மக்களைப் பாதுகாத்திடும் பொருட்டு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மூலம் மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன. அதோடு, தற்காலிக மறுசீரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.12.2024) தலைமைச் செயலகத்தில், முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தன்னுடைய ஒரு மாத ஊதியத்திற்கான காசோலையை தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் அவர்களிடம் வழங்கினார்.

### டிச. 6 முதல் டிச.12 வரை புயல் பாதிக்கப்பட்ட இடங்களில்

# சிறப்பு சிறுவணிகக் கடன் திட்ட முகாம்!

## அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தகவல்!



சென்னை,டிச.7-

கூட்டுறவுத்துறையின் மூலம் ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, கடலூர், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட சிறுவணிகர்களுக்கு ”சிறப்பு சிறு வணிகக் கடன் திட்டம்” முகாம் நடைபெறவுள்ளது கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தகவல் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, கூட்டுறவுத்துறையின் மூலம் ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, கடலூர், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட சிறுவணிகர்களுக்கான “சிறப்பு சிறு வணிகக் கடன் திட்டம்” செயல்படுத்தப்படவுள்ளது. இதற்கான சிறப்பு முகாம்கள் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் நடைபெறவுள்ளது என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தகவல் தெரிவித்துள்ளார்கள்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளதாவது :-

தமிழ்நாட்டில் நவம்பர் 30ஆம் தேதி வீசிய “ஃபெஞ்சல்” புயல் காரணமாக தமிழ்நாட்டின் வட மாவட்டங்களில் பரவலான மற்றூம் கடுமையான மழைப்பொழிவு ஏற்பட்டது. குறிப்பாக, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் ஆகிய மாவட்டங்களில் இதன் தாக்கம் மிக அதிகமாக இருந்தது. திருவண்ணா மலை, தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் குறிப்பிட்ட சில பகுதிகளிலும் வழக்கத்தை விட அதிக மழைப்பொழிவு ஏற்பட்டுள்ளது.

ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணா மலை, கடலூர், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் அதிக கனமழை காரணமாக சிறுவணிகர்கள், சிறு கடை உரிமையாளர்கள் மற்றும் தெருவோர வியாபாரி கள் பெரிய பாதிப்பை சந்தித்துள்ளனர்.

முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, சிறுவணிகர்களுக்கு உதவிகரம் நீட்ட வேண்டிய அவசரத்தேவையை கருத்தில் கொண்டும், உள்ளூர் பொருளாதாரத்தில் அவர்களது பங்களிப்பை அறிந்தும், அவர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கவும் “சிறப்பு சிறு வணிகக் கடன் திட்டம்” மூலம் முகாம் அமைத்து கடன் வழங்கப்படவுள்ளது.

கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு தகுதியானவர்களுக்கு குறைந்த வட்டியில் ரூ.10,000/- முதல் ரூ.1 இலட்சம் வரை சிறுவணிகக்கடன் வழங்கப்படவுள்ளது. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கூட்டுறவு வங்கிகளில் கணக்கு வைத்துள்ள வாடிக்கையாளர்கள், தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்த அட்டை உடைய தெருவியாபாரிகள், சிறு வணிகர்கள், வணிக உபயோகத்திற்காக மின் இணைப்பு பெற்ற சிறு கடை வியாபாரிகள், தெருவோரங்களில் வியாபாரம் செய்யும் பூ வியாபாரிகள், காய்கறி மற்றும் பழங்கள் விற்பனை செய்பவர்கள், சாலையோர உணவகங்கள் நடத்துபவர்கள், கைவினைஞர்கள், மீனவர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் (புயலால் பழுதடைந்த ஆட்டோவினை சீரமைக்க), அமைப்புசாரா தொழிலாளர்கள், நடைபாதையில் கடை வைத்திருப்பவர்கள் ஆகிய சிறு வணி கர்கள்/சிறு, குறு தொழில் முனைவோர்கள் இத்திட்டத்தின் மூலம் கடன் பெற தகுதியானவர்கள் ஆவர்.

இந்த “சிறப்பு சிறு வணிகக் கடன் திட்டம்” முகாம்கள் மேற்கண்ட மாவட்டங்களில் 06.12.2024 முதல் 12.12.2024 வரை நடைபெறவுள்ளது. விழுப்புரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் மரக்காணம், திருக்கோவிலூர், பெரியசெவலை, கண்டாச்சிபுரம், விக்கிரவாண்டி ஆகிய கிளைகளிலும், கடலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் மஞ்சகுப்பம், செம்மண்டலம், கூத்த ப்பாக்கம், நெல்லிகுப்பம், பண்ருட்டி ஆகிய கிளைகளிலும் நடைபெறவுள்ளது.

இந்த ”சிறப்பு சிறு வணிகக் கடன் திட்டம்” முகாம்களில் சிறுவணிகர்கள் உரிய ஆவணங்கள் மூலம் விண்ணப்பித்து பயனடையுமாறு கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் கேட்டுக்கொண்டுள்ளார்.

### திருச்சி மாவட்டத்தில்

# 4 திருக்கோயில்களில் புதிய திட்டப் பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு அடிக்கல் நாட்டி முடிவுற்றப் பணிகளை திறந்து வைத்தார்!

திருச்சி, டிச. 7 -

திருச்சி மாவட்டத்தில் 4 திருக்கோயில்களில் ரூ.22.60 கோடி மதிப்பிலான புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.1.30 கோடி செலவில் முடிவுற்ற திட்டப் பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் திருச்சி மாவட்டத்தில் 4 திருக்கோயில்களில் ரூ.22.60 கோடி மதிப்பிலான புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்து, ரூ.1.30 கோடி செலவில் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தார். மேலும், குணசீலம், பிரசன்ன வெங்கடாஜலபதி திருக்கோயிலுக்கு காணிக்கையாக வரப்பெற்ற 12 கிலோ 595 கிராம் பொன் இனங்களைச் சுத்தத் தங்கமாக மாற்றி தங்க முதலீட்டுப் பத்திரத்தில் முதலீடு செய்யும் வகையில் பாரத ஸ்டேட் வங்கி மண்டல மேலாளர் அவர்களிடம் ஒப்படைத்தார்.

இந்து சமய அறநிலையத்துறையானது தன் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற பணிகளை செம்மையாக மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு திருச்சி மாவட்டம், குணசீலம், பிரசன்ன வெங்கடாஜலபதி திருக்கோயிலில் உபயதாரர் நிதியின் மூலம் ரூ.7.58 கோடி மதிப்பீட்டில் பிரகார மண்டபம், ரூ.5.19 கோடி மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் புதுப்பித்தல், ரூ.7.44 கோடி மதிப்பீட்டில் புதிதாக இரண்டு ஐந்து நிலை இராஜகோபுரங்கள், ஒரு மூன்று நிலை இராஜகோபுரம் கட்டுதல் மற்றும் இராஜகோபுர அடித்தள பணிகள், ரூ.1.56 கோடி மதிப்பீட்டில் கருட மண்டபம் கட்டுதல் மற்றும் ரூ.23 இலட்சம் மதிப்பீட்டிலான இதர பணிகள் உள்பட ரூ.22 கோடி மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்து, ரூ.26.50 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள பசு மடத்தினை திறந்து வைத்தார். மேலும், இத்திருக்கோயிலுக்கு காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்று பொன் இனங்களில் திருக்கோயி லுக்குப் பயன்படுத்த இயலாத 12 கிலோ 595 கிராம் பொன் இனங்களைச் சுத்தத் தங்கமாக மாற்றி தங்க முதலீட்டுப் பத்திரத்தில் முதலீடு செய்யும் வகையில் பாரத ஸ்டேட் வங்கி திருச்சி மண்டல மேலாளர் அவர்களிடம் ஒப்படைத்தார்.

அதனைத் தொடர்ந்து, திருப்பைஞ்ஞீலி, ஞீலிவனேஸ்வரர் திருக்கோயி லில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள வாகன மண்டப திருப்பணியை தொடங்கி வைத்து, ரூ.42 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள சுகாதார வளாகத்தை பக்தர்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். பின்னர், மலைக்கோட்டை, தாயுமானசுவாமி திருக்கோயில் யானை லட்சுமிக்கு ரூ.50 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள யானை குளியல் தொட்டியினையும், திருவானைக்காவல், ஜம்புகேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.11.30 இலட்சம் செலவில் புனரமைக்கப்பட்டுள்ள நெற்களஞ்சியத்தினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்து பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சிகளில் மாண்பமை உயர்நீதிமன்ற நீதியரசர் (ஓய்வு) கே.ரவிச்சந்திரபாபு, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், திருச்சி மாவட்ட ஆட்சியர் மா.பிரதீப்குமார், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், இணை ஆணையர்கள் திருமதி சி.கல்யாணி, திருமதி இரா.வான்மதி, சி.மாரியப்பன், எ.ஆர்.பிரகாஷ், பாரத ஸ்டேட் வங்கி மண்டல மேலாளர் மதன், உதவி ஆணையர்கள் எம்.லட்சுமணன், வி.சுரேஷ், திருமதி ஜி.உமா, திருமதி டி.அனிதா, மலைக்கோட்டை திரு க்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ஐயப்பன், குணசீலம் திருக்கோயில் பரம்பரை அறங்காவலர் கே.ஆர். பிச்சுமணி ஐயங்கார், உள்ளாட்சி அமைப்பு களின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு வடலூர் ஆபத்தாரண புரத்தில் அமைந்துள்ள வசந்தம் ஆசிரமத்தில், மனவளர்ச்சி குன்றிய ஆதரவற்ற மாணவ–மாணவிகளுக்கு என்.எல்.சி தொ.மு.ச சார்பில் மதிய உணவு வழங்கப்பட்டது. தொ.மு.ச பேரவை இணை பொதுச்செயலாளருமான, என்.எல்.சி தொ.மு.ச., பொதுச் செயலாளர் என்.பாரி தலைமை தாங்கி மாணவ – மாணவிகளுக்கு உனவுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் என்.எல்.சி தொ.மு.ச பொருளாளர் ஆர்.ஐயப்பன், தொ.மு.ச துணைத் தலைவர்கள் மோகன், மஜீத், பகுதி செயலாளர் கணபதி, ராஜவேலு, சக்திவேல் மற்றும் தொ.மு.ச நிர்வாகிகள் உடனிருந்தனர்.



திருத்துறைப்பூண்டி சட்டமன்ற தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருத்துறைப்பூண்டி ஒன்றியம் அரக்கரை நடுநிலைப் பள்ளிக்குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்களை மண்டல பொறுப்பாளர் ஸ்ரீதர் தலைமை ஏற்று வழங்கினார். ஒன்றிய செயலாளர் ப.பிரகாஷ், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பா.அரவிந்த், மாவட்ட துணை செயலாளர் எம்.ராமகிருஷ்ணன், வி.பி.எஸ்.பாலகிருஷ்ணன் செல்வ. ஜெயதேவன், சேது.முருகானந்தம், எஸ்.பி.பாஸ்கர், வசந்தன் புலிகேசி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். கொக்கலாடி ஊராட்சி மன்ற தலைவரும், தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளருமான வசந்தன் புலிகேசி நிகழ்வுகளை ஏற்பாடு செய்து நடத்தினார். நிகழ்வில் தகவல் நுட்ப அணியின் சார்பில் குழந்தை களுக்கு மேசைகள், நாற்காலிகள், நோட்டு புத்தகங்கள்,எழுது பொருட்கள் இலவசமாக வழங்கப்பட்டது. மேலும் 6 முதல் 8 ம் வகுப்பு மாணவ – மாணவிகளுக்கு சமூக வலைதளத்தை பாது காப்பாக பயன்படுத்தும் முறை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. தினேஷ், ரா.கோ.உதயசூரியன், வசந்தி, ரம்யா,சீனிக்குமார், முஹம்மது சப்வான், வீரசேகரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், தலைமை ஆசிரியர் மரிய தெரசா, ஆசிரியர்கள் வீரமணி, செந்தில், வசந்தா, செல்வராணி, ராஜி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### 2026 சட்டமன்றத் தேர்தலில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள

# விராலிமலை உட்பட ஆறு தொகுதிகளிலும் தி.மு.க. வெற்றி பெறும்!

## ராயவரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!

புதுக்கோட்டை, டிச. 7 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் அரிமளம் தெற்கு ஒன்றியம் ராயவரத்தில் திமுக பொதுக்கூட்டம் நடைபெற்றது. பொதுக்கூட்டத்திற்கு தமிழக சட்டத்துறை அமைச்சரும் தெற்கு மாவட்ட கழக செயலாளருமான எஸ். ரகுபதி தலைமை தாங்கினார்.

ஒன்றிய கழகச் செயலாளர்கள் பொன்.ராமலிங்கம், வி.ஆர்.இளையராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் சுஜாதா இளம் பேச்சாளர்கள் மகிபன், பரத் ஆகியோர் பேசினார்கள்.

கூட்டத்தில் பேசிய சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி 234 தொகுதிகளிலும் சூறாவளி சுற்று பயணம் மேற்கொண்டு இயக்கத்திற்கு வலுவூட்டியவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் , அதற்காக கிடைத்தது தான் இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் பொறுப்பு, 2024 தேர்தலில் 40க்கு 40 வெற்றி பெறுவோம் என கூறி வெற்றி பெற்ற இந்தியாவில் உள்ள ஒரே தலைவர் தளபதி ஸ்டாலின் அவர்கள் .முதல்வர் அவர்களும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் தமிழகம் முழுவதும் சூறாவளி சுற்றுப்பயணம் செய்து கழகத்தை ஆட்சி கட்டிலில் அமர செய்தார்கள் .

நாடாளுமன்றத் தேர்தலில் நமது துணை முதல்வர் அவர்கள் தீவிர பிரச்சாரம் செய்து 40க்கு 40 வெற்றி வாகை சூட வைத்தார்கள். அதற்காக கிடைத்த பரிசு தான் இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் , கலைஞருக்கு தளபதியிடம் பிடித்தது உழைப்பு உழைப்பால் உயர்ந்தவர் ஸ்டாலின் இரண்டாவது முறை மீண்டும் தமிழகத்தின் முதல்வராக தளபதி அவர்கள் பதவி ஏற்பார்கள்

200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற்று மீண்டும் தளபதி முதல்வராக பொறுப்பேற்க உள்ளார்கள். புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள விராலிமலை உட்பட்ட ஆறு தொகுதிகளிலும் தி.மு.க. வெற்றி பெறும். முதல்வர், துணை முதல்வர் ஆகியோர் தற்போது ஏற்பட்ட பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கிடைக்க நடவடிக்கை மேற்கொண்டார்கள் .பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு எடப்பாடி பழனிச்சாமி சென்றாரா, 50 சென்டிமீட்டர் மழை பெய்து வானம் பொத்துக் கொண்டு கொட்டினாள் வெள்ளம் வரும் அதையும் திறமையாக கையாண்டு மக்களை பாதுகாத்த அரசு தளபதி தலைமையிலான அரசு, உழைப்புக்கு சொந்தக்கார கட்சி தி.மு.க. இரவு பகலாக மக்களை சந்திக்கும் இயக்கம் தி.மு.க. நாங்கள் மக்களிடம் சென்று தி.மு.க.வின் சாதனைகளை எடுத்து சொல்ல முடியும்.

தமிழகத்தில் பல்வேறு புதிய திட்டங்களை தளபதி செயல்படுத்தி வருகிறார் .மற்ற மாநிலங்கள் பின்பற்றும் மாநிலமாக தமிழகம் திகழ்ந்து கொண்டுள்ளது . இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி பேசினார்.

கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர்கள் சீனி. பழனியப்பன், கலைவாணி சுப்பிரமணியன், அரிமளம் ஒன்றிய குழு தலைவர் மேகலா முத்து. பேரூராட்சி தலைவர் மாரிக்கண்ணு முத்துக்குமார். அரிமளம் பேரூராட்சி செயலாளர் நாசர் என்ற செந்தில்குமார், ஒன்றிய அவைத் தலைவர் கு.பெரியசாமி, ஒன்றிய துணைச் செயலாளர்கள் நா. கார்த்திக், சி. இராஜ கோபால், ஒன்றிய பொருளாளர் ஆர்.சுப்பையா, மாவட்ட பிரதிநிதி அ.செல்வராஜ், முல்லை ரமேஷ், வெண்ணிலா உள்ளிட்ட ஏராள மானவர்கள் கலந்து கொண்டனர்.

முடிவில் ராயவரம் கிளைக் கழக செயலாளர் ஏ.அரங்குலிங்கம் நன்றி கூறினார்.



இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருத்துறைப்பூண்டி நகர கழக செயலாளரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான ஆர். எஸ்.பாண்டியன் தலைமையில் அரசு மருத்துவமனையில் பிறந்த 25 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் மற்றும் பரிசு பெட்டகங்கள் வழங்கப்பட்டது. நிகழ்வில் மாவட்ட சார்பு அணி சிக்கந்தர், மு.ஒன்றிய செயலாளர் முகில்.ராஜேந்திரன், மாவட்டப் பிரதிநிதிகள் பன்னீர் செல்வம், சக்திவேல், ஜாகிர் உசேன், மு.கூட்டுறவு சங்க தலைவர் சுந்தர் மற்றும் நகர துணை செயலாளர்கள் ஓம் சக்தி கண்ணன், ரவி மற்றும் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், நகரமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**சி. வாசு**

**டிசம்பர் 7 (2014)**



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

ஆயிரம்விளக்கு பகுதியில் வட்டக் கழகப் பொறுப்பாளர், மாவட்டப் பிரதிநிதி, பகுதி துணைச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

சென்னை துறைமுக அறக்கட்டளை உறுப்பினராகவும், தொலைபேசி ஆலோசனைக்குழு உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.